1967 ஜூலை 12]

THIRU M. WILLIAM : May I know whether any such centre will be opened at Madruai ?

THE HON. THIRU S. J. SADIQ PADSHA : There is no such proposal.

Handloom industry in Tiruttani

*293 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(a) whether it is a fact that there is a big slump in handloom goods trade in Tiruttani taluk, Chingleput district ;

(b) if so, the steps proposed to be taken to improve the pitiable plight of the handloom weavers in that area ; and

(c) whether there is any propasal to improve the handloom goods trade ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

(உ) கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்களைத் தவிர, தேவையான இடங்களின் தேவைக்கேற்ற துயர்தணிப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகமும், இந்தியக் கைப்பணிகள்-கைத் தறிகள் ஏற்றுமதிக் கார்ப்பிரேஷனும் கைத்தறித் துணிகளின் ஏற்று மதியை அதிகரிக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that, when the Hon. Minister for Education visited those areas, he found there a lot of people without the usual work of weaving because of the glut in that trade and what steps are being taken by the Government to give them alternative employment ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருத்தணி தாலூகாவைப் பொறுத்தவரையில், கைத்தறித் துணித்தேக்கத் தினால், நெசவாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கக் கூடும். பொதுவாக எப்போதும் இருந்து வருகிற நிலைமை இருக்கலாமே தவிர புதிதாக எதுவும் ஏற்படவில்லை. அங்கு 12 ஆயிரம் கைத்தறிகள் இருக் கின்றன. ஆயிரம் கைத்தறிகள் கூட்டுறவுத் துறையின்கீழ் இருக்கின்றன. சென்ற ஆண்டு 11 லட்ச ரூபாய் மதிப்புள்ள துணி உற்பத்தியானது. சென்ற ஆண்டின் விற்பனை 12 லட்சத்திற்கு ஆகியிருக்கிறது. திருத்தணி தாலூ காவைப் பொறுத்தமட்டில் அங்கு உற்பத்தியாகும் துணிகள் வெளி நாட்டு ஏற்றுமதிக்கு உகந்ததாகவும், உள்நாட்டு மார்க்கெட்டுக்கு உகந்த தாகவும் இருக்கிறது, மெட்ராஸ் லுங்கி, மெட்ராஸ் ஹேண்ட் கர்ச்சிப், பாக்கெட் ஹேண்ட் கர்ச்சிப் போன்றவைகள் எல்லாம் கணிசமான அளவுக்கு விற்பனையாகியுள்ளன. நிலைமை மோசமாக இல்லை. பொதுவாக கைத் தறித் துறையில் ஏற்பட்டிருக்கிற மந்த நிலைமை திருத்தணி தாலூகாவில் இருக்கலாமே தவிர, வேறு நிலைமை இல்லை.

சிதம்பரம் வட்டத்தில் காகிதத் தொழிற்சாலை

*294 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூக்காவில், கருப்பூர், ஒட்டரைப்பாளையம், முள்ளங்குடி, பருத்திக்குடி, வெள்ளூர் முதலிய பல கிராமங்களில் உள்ள மூங்கில் மரங்களை உபயோகப்படுத்தும் வகையில் அப்பகுதியில் பேப்பர் தொழிற் சாலை ஒன்று அமைக்க அரசாங்கத்தில் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு எஸ். சிவசுப்பிரமணியன் : சார், கொள்ளிடப் பகுதியில் ஏராள மான கிராமங்களில் அதிகமான மூங்கில் மரத் தோப்புகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்களுக்கு, அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்தித் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அங்கு இரண்டு பெரிய காகிதத் தொழிற்சாலைகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சிதம்பரம் தாலுகாவைப் பொறுத்தவரையில் அங்கு கிடைக்க கூடிய மூங்கில் எல்லாம் வீடு கட்டவும், சாமான்கள் செய்யவுமே பயன்படுகின்றன. அந்த மூங்கிலை மட்டும் நம்பி அங்கே காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த வசதியில்லை.

மதுரைச் சிறப்பு அங்காடி

*295 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை சிறப்பு அங்காடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சபைமுன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, the statement placed on the table does not include the actual depreciation charges and there is considerable loss. Will this Government come forward and tell us clearly whether it has got any idea of having some more supermarkets or whether it will stop with the present supermarkets ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்தினுடைய அலோசனையை ஏற்று, 6 சிறப்பு அங்காடிகளைத் திறப்பதாக முடிவு செய்து, இப்போது 5 திறக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

திரு. சி. கோவிந்தராசன் : ஐயா, சூபர் மார்க்கெட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுக்கப்பட்டு வருகிறதே, அதற்கு ஏதாவது குறைந்த வாடகைக்கு இடம் கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 5 ஆயிரம் ரூபாய்தான் வாடகை கொடுக்கப்படுகிறது. குறைந்த வாடகையில் இடம் கிடைத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

Thiru K. VINAYAKAM : Is the Minister aware of the fact that, not only the Madurai Super Market, the Madras Super Market also is sustaining a heavy loss, it is a colossal waste of money, it has become a white elephant and will the Government think of winding up the entire organisation and thus avoid the throwing of good money after bad business ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சூபர் மார்க்கெட்டு வேண்டுமா ? வேண்டாமா என்பதைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து முற்றிலும் தவறான கருத்து. அதற்கு ஆதாரம் இல்லாமல் சொல்கிறார்கள். சென்னை சூபர் மார்க்கெட்டைப் பொறுத்தவரையில், இதுவரையில் ஓரளவு லாபம் கிடைத்திருக்கிறது. அந்த லாபம் போடப்பட்ட முதலுக்கு உரியதுதானா, போதுமானவையா என்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

---

* 91–92ம் பக்கத்தில் இணைப்பு II. ஆக அச்சிடப்பட்டுள்ளது.